ஸ்ரீ:

# । श्री रङ्गनाथ स्तोत्रम् ।।ஶ்ரீ ரங்கநாத ஸ்தோத்ரம்।।



*நாளும் பெரிய பெருமாள் அரங்கர் நகைமுகமும்*
*தோளும் தொடர்ந்து என்னை ஆளும் விழியும் - துழாய் மணக்கும்*
*தாளும், கரமும், கரத்தில் சங்கு, ஆழியும், தண்டும், வில்லும்,*
*வாளும் துணைவருமே தமியேனை வளைந்து கொண்டே !*

www.srirangapankajam.com

ஶ்ரீ:

## । श्री रङ्गनाथ स्तोत्रम् ।।ஶ்ரீ ரங்கநாத ஸ்தோத்ரம்||

सप्तप्राकारमद्ये सरसिजमुकुलोद्बासमाने विमाने
कावेरिमद्यदेशे म्रुदुतरपणिराट् भोगपर्यङ्गभागे ।
निद्रामुद्राभिरामं कटिनिकटशिर:पार्श्वविन्यस्तहस्तं
पद्माधात्रिकराभ्यं परिचितचरणं रङ्गराजं भजेहम् ।। १।।

ஸப்தப்ராகாரமத்யே ஸரஸிஜமுகுலோத்பாஸமானே விமானே
காவேரிமத்யதேசே ம்ருதுதரபணிராட் போகபர்யங்கபாகே .
நித்ராமுத்ராபிராமம் கடினிகடசிர:பார்ச்வவின்யஸ்தஹஸ்தம்
பத்மாதாத்ரிகராப்யம் பரிசிதசரணம் ரங்கராஜம் பஜேஹம் .. 1..

ஏழு ப்ராகாரங்களின் (மதிள் சுவர்) நடுவில் தாமரை மொட்டுப் போல விளங்குகின்ற விமானத்தில், திருக்காவிரியின் நடுவில், மிக மென்மை படைத்த திருவநந்தாழ்வானாகிற கட்டிலிலே (அரவணையில்) உறங்குவது போன்ற குறிப்பினால் அழகானவரும், இடுப்பிலும், சிரஸ்ஸின் அருகிலும் கைகளை வைத்திருப்பவரும், மலர் மகளாலும், நில மகளாலும் கைகளால் அடிவருடப்படுகின்றவருமான ஶ்ரீரங்கநாதனைத் தியானிப்போம் (சிந்திப்போம்).

कस्तूरिकलिथोर्ध्वपुण्ड्रतिलकं कर्णान्तलोलेक्षणं
मुग्धस्मेरमनोहराधरदलं मुक्ताकिरीटोज्ज्वलम् ।
पश्यन्मानसपश्यतोहररुचिं पर्यायपङ्केरुहं
श्रीरङ्गाधिमते: कदा नु वदनं सेवेय भूयोप्यहं ।। २ ।।

கஸ்தூரிகலிதோர்த்வபுண்ட்ரதிலகம் கர்ணாந்தலோலேக்ஷணம்
முக்தஸ்மேரமனோஹராதரதலம் முக்தாகிரீடோஜ்ஜ்வலம் .
பச்யன்மானஸபச்யதோஹரருசிம் பர்யாயபங்கேருஹம்
ஶ்ரீரங்காதிமதே: கதா நு வதனம் ஸேவேய பூயோப்யஹம் .. 2 ..

கஸ்துாரிதிலகம் அணிந்திருப்பதும், காது வரை நீண்ட கண்களையுடையதும், அழகான புன்முறுவலைக் கொண்டதும், மனதைக் கொள்ளை கொள்ளுவதுமான அதரங்களை (உதடுகளை)யுடையதும், முத்துக் கீரிடத்தினால் ஒளி பெற்று விளங்குவதுமான, பார்ப்பவர் மனதைக் கொள்ளைக் கொள்ளும் வடிவழகு படைத்த திருவரங்கநாதனுடைய தாமரைப் போன்ற திருமுக மண்டலத்தை மறுபடியும் எப்பொழுது ஸேவிக்கப் பெறுவேன்?

कदाहं कावेरीतटपरिसरे रङ्गनगरे
शयानं भोगिन्द्रे शतमखमणिश्यामलरुचिम् ।
उपासीनः क्रोशन् मधुमथन नारायण हरे
मुरारे गोविन्देत्यनिशंपनेष्यामि दिवसान् ।। ३ ।।

கதாஹம் காவேரீதடபரிஸரே ரங்கனகரே
சயானம் போகிந்த்ரே சதமகமணிச்யாமலருசிம் .
உபாஸீன: க்ரோசன் மதுமதன நாராயண ஹரே
முராரே கோவிந்தேத்யனிசம்பனேஷ்யாமி திவஸான் .. 3 ..

காவிரி நதிக்கரையருகில் விளங்கும் திருவரங்க நகரில் ஆதிசேஷன் மீது சயனித்திருப்பவனும், இந்திர நீலம் போன்ற திருமேனியழகை உடையவனுமான திருவரங்கநாதனை தியானம் செய்து கொண்டு, மதுவை ஸம்ஹாரம் செய்தவனே! நாராயண! ஹரே! முராரே! கோவிந்தா! என்று அலற்றிக் கொண்டும் நான் எப்போது நாட்களைக் கழிக்கப் போகிறேன்.

कदाहं कावेरिविमलसलिले वीतकलुषः
भवेयं तत्तीरे श्रममुषि वसेयं घनवने ।
कदा वा तं पुण्ये महति पुलिने मङ्गलगुणं
भजेयं रङ्गेशं कमलनयनं शेषशयनम् ।। ४ ।।

கதாஹம் காவேரிவிமலஸலிலே வீதகலுஷ:
பவேயம் தத்தீரெ ச்ரமமுஷி வஸேயம் கனவனே .
கதா வா தம் புண்யே மஹதி புலினே மங்கலகுணம்
பஜேயம் ரங்கேசம் கமலனயனம் சேஷசயனம் .. 4 ..

நான் எப்போது காவிரியின் துாயநீரில் குளித்து பாபம் நீங்கப் பெறுவேன்? அந்த காவிரியின் கரையில் சிரமத்தைப் போக்கும் அடர்ந்த சோலையில் வசிப்பேன?. அக்காவிரியின் பரந்த புனிதமான மணல் தரையில் அமர்ந்து, சகல கல்யாண குணங்களையுடையதும், பங்கயக் கண்ணனும், நாகணை மேல் துயில் கொண்டவனுமாகிய திருவரங்கநாதனைத் தியானம் செய்வேன்?

पूगीकण्ठद्वयससरसस्निग्ध नीरोपकण्ठां
आविर्मोदस्तिमितशकुना नूदितब्रह्मघोषाम् ।
मार्गे मार्गे पथिकनिवहैः उञ्छ्यमानापवर्गाम्
पश्येयं तां पुनरपि पुरीं श्रीमतीं रङ्गधाम्नः ।। ५ ।।

பூகீகண்டத்வயஸஸரஸஸ்ன்னிக்த நீரோபகண்டாம்
ஆவிர்மோதஸ்திமிதசகுனா நூதிதப்ரஹ்மகோஷாம் .
மார்கே மார்கே பதிகனிவஹை: உஞ்ச்யமானாபவர்காம்
பச்யேயம் தாம் புனரபி புரீம் ஶ்ரீமதீம் ரங்கதாம்ன: .. 5 ..

பாக்குமரத்தின் கழுத்தளவு நிற்கும் ரஸமான நீரை அருகிலே கொண்டதும், சந்தோஷம் வெளிப்பட்டு அதனால் திகைத்து நிற்கும் பக்ஷிகளால் தொடர்ந்து உச்சரிக்கப்படுகின்ற வேத ஒலியையுடையதும், வழிதோறும் வழிப்போக்கர்களால் மோக்ஷத்தை யாசிக்கப்படுவதுமாக இருந்துள்ள அந்த அழகு பொருந்திய திருவரங்கத்தை எப்போது மறுபடியும் பார்ப்பேன்?

न जातु पीताम्रुतमूर्छितानां नाकौकसां नन्दनवाटिकासु ।
रङ्गेश्वर त्वत्पुरमाश्रितानां रथ्याशुनामन्यतमो भवेयम् ।। ६ ।।

ந ஜாது பீதாம்ருதமூர்சிதானாம் நாகௌகஸாம் நந்தனவாடிகாஸு
ரங்கேச்வர த்வத்புரமாச்ரிதானாம் ரத்யாசுனாமன்யதமோ பவேயம்

அமுதத்தை அளவில்லாது பருகி மயங்கிக் கிடக்கின்ற தேவர்களின் நந்தன உத்யானவனத்தில் ஒருபொழுதும் ஒருவனாக நான் இருக்க வேண்டேன். திருவரங்கநாதனே! தேவரீர் நித்யவாசம் செய்யும் திருவரங்கத்தை அண்டி வாழ்கின்ற தெருநாய்களில் ஒன்றாக இருக்கக் கடவேன்.

असन्निकृ स्य निकृ जन्तोः मिथ्यापवादेन करोषि शान्तिम् ।
ततो निकृ` मयि सन्निकृ` कां निष्कृतिं रङ्गपते करोषि ।। ७ ।।

அஸன்னிக்ருஷ்டஸ்ய நிக்ருஷ்டஜந்தோ:
மித்யாபவாதேன கரோஷி சாந்திம் .
ததோ நிக்ருஷ்டே மயி ஸன்னிக்ருஷ்டே
காம் நிஷ்க்ருதிம் ரங்கபதே கரோஷி .. 7 ..

திருவரங்கநாதனே! நின் கோயிலைக் கிட்டாத ஒரு தாழ்ந்த ஜந்துவான நாய் வந்ததாக ஒரு பொய்யான அபவாதம் காட்டி சாந்தி செய்விக்கின்றாய் - ஆனால், அதையும் விடத் தாழ்ந்த நான் கிட்டியிருக்கிறேன். அதற்கு என்ன பரிஹாரம் (சாந்தி) செய்யப் போகிறாய்?.

श्रीरङ्गं करिशैलम ानगिरिं तार्क्ष्याद्रिसिंहाचलौ
श्रीकूर्मम् पुरुषोत्तमं च भदरिनारायणं नैमिशम् ।
श्रीमद् द्वारवति प्रयाग मथुरयोध्यागयाः पुष्करं
सालग्रमगिरिं निषेव्य रमते रामानुजोयं मुनिः ।। ८ ।।

ஶ்ரீரங்கம் கரிசைலமஞ்ஜனகிரிம் தார்க்ஷ்யாத்ரிஸிம்ஹாசலௌ
ஶ்ரீகூர்மம் புருஷோத்தமம் ச பதரினாராயணம் நைமிசம் .
ஶ்ரீமத் த்வாரவதி ப்ரயாக மதுரயோத்யாகயா: புஷ்கரம்
ஸாலக்ரமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமானுஜோயம் முனி: .. 8 ..

திருவரங்கம், பெருமாள்கோவில் (விஷ்ணுகாஞ்சி), திருவேங்கடம், தார்க்ஷயகிரி, சிம்மாசலம், ஸ்ரீகூர்மம், ஜகந்நாதம், பத்ரிகாஸ்ரமம், நைமிசாரண்யம், துவாரகை, ப்ரயாகை, வடமதுரை, அயோத்தி, கயை, புஷ்கரம், சாளக்கிராமம் முதலிய ஸ்வயம்வ்யக்த (தானேதோன்றிய) திவ்ய தேஸங்களை (திருப்பதிகளை) ஸேவித்து ஸ்ரீராமாநுஜர் இன்புறுகிறார்.